சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 19.07.2023
OS.NO. 38/2020
PW2: திரு. குழந்தைசாமி (வயது 60 ) த/பெ. செபஸ்தியார்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**குறுக்கு விசாரணை**

நான் சாட்சி சொல்வதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. நீதிமன்றத்திலிருந்து எத்தனை முறை அழைப்பாணை வந்தது என்றால் 3 முறை வந்தது. அந்த சமயத்தில் நான் நீதிமன்றத்திற்கு வரவில்லை என்றால் நான் ஒரு தடவை நீதிமன்றம் வந்தேன். வழக்கு போட்டு இருப்பது யார் என்றால் லாரன்ஸ். அவர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தாப்பா பையன். இதற்கு முன்னால் நீதிமன்றத்தில் நான் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் அனைத்தையும் நான் சொன்னதா அல்லது லாரன்ஸ் சொன்னதா என்றால் நான் சொன்னதாகும். நான் சாட்சி கையெழுத்தாக போட்டது எதில் போட்டீர்கள் என்றால் பாண்டீல் போட்டேன். பாண்டீல் கையெழுத்து போடும் போது யார் இருந்தார்கள் என்றால் நான் சவேரியார், குழந்தைசாமி, லாரன்ஸ், பால்ராஜ் ஆகியோர் லாரன்ஸ் வீட்டில் வைத்து இருந்தோம் கையெழுத்து போட்டோம். பிரதிவாதி எனக்கு உறவினர் இல்லை அவர் எனக்கு ஒரே ஊர்காரர், பழக்கம். அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார். அவருக்கு விவசாய நிலங்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. அந்த நிலத்தை அவர் விற்க முயற்சி எதுவும் செய்தாரா என்றால் அது தெரியவில்லை. பிரதிவாதிக்கு ஓரளவிற்கு வசதி இருக்கிறது என்றால் காடு வீடு இருக்கிறது. அவர் ஏல சீட்டு, வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழீல் செய்து கொண்டிருந்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நான் சாட்சி கையெழுத்து போட்ட பாண்டீல் உள்ள விபரத்தை படித்து தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. அதில் உள்ள விபரத்தை எனக்கு படிக்க தெரியாததால் என்னிடம் அந்த விபரத்தை படிக்க கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் இல்லை. என்னிடம் சாட்சி கையெழுத்து போடுங்கள் என்று யார் கேட்டார் என்றால் பால்ராஜ்

கேட்டார். பால்ராஜிடம் எதற்காக கையெழுத்து போடுங்கள் என்று சொல்கிறீர்கள் என்று கேட்டீர்களா என்றால் பணம் வாங்கியதற்காக கையெழுத்து போட சொன்னார். நான் எதற்காக லாரன்ஸ் வீட்டிற்கு போனீர்கள் என்றால் லாரன்ஸ் பணம் கொடுப்பதற்காக லாரன்ஸ் வர சொன்னார் அங்கு சென்றோம். என்னை இல்லாமல் லாரன்ஸ் பணம் கொடுக்கமாட்டார். அந்த லாரன்ஸ் வீட்டில் லாரன்ஸ் அண்ணன் அவரது மனைவி மற்றும் அவரது மகன் இருந்தார்கள். லாரன்ஸ் பணம் கொடுத்த பிறகு வட்டி கேட்டாரா என்றால் கேட்ட விபரம் எனக்கு தெரியும். நானும் பால்ராஜிடம் பணத்தை கொடு என்று கேட்டேன். சாட்சி கையெழுத்து போட்ட புரோ நோட்டில் எவ்வளவு வட்டி, எவ்வளவு பணம் என்று கேட்டு தெரிந்து கொண்டீர்களா என்றால் தெரிந்து கொண்டேன். ரூ.1 1/2 லட்சம் பணமாகும். நான் கையெழுத்து போட்ட புரோ நோட்டில் எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2017 வருடம் 3 மாதம் எழுதப்பட்டது தேதி ஞாபகம் இல்லை. நான் கையெழுத்து எந்த தேதியில் போட்டேன் என்றால் தேதி மறந்துவிட்டேன். லாரன்ஸ் எந்த பணமும் பால்ராஜிடம் கொடுக்கவில்லை என்றும் லாரன்ஸ் என்பவர் எனது உறவினர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. லாரன்ஸிடம் பால்ராஜ் எந்த பணமும் வாங்கவில்லை என்றாலும் அவர் குறிப்பிட்ட தேதியில் எந்த புரோநோட்டில் கையெழுத்து போட்டு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கூறுவது போல் பால்ராஜ் என்னை சாட்சி கையெழுத்து போட என்னை அழைக்கவில்லை என்றால் சரியல்ல. லாரன்ஸ்பொய்யாக தயார் செய்த புரோ நோட்டில் கையொழுத்து போட்டுள்ளதால் தான் அதில் எந்த தேதியில் கையெழுத்து போட்டேன் என்று தெரியவில்லை என்றால் சரியல்ல. யார் யார் அங்கிருந்தார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க பிரதிவாதிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.